**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : STC 294/2024**

**Prosecution witness : அ.சா. 8** **Date : 23.03.2026**

| | |
|---|---|
| **Name : ஈஸ்வரன்** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

1) நான் தற்போது மேட்டூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 16.01.2024–ம் தேதி கருமலைக்கூடல் காவல்நிலையத்தில் காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் பரமசிவம் நிலையப் பொறுப்பில் இருந்த போது, மேட்டுர் மற்றும் சேலம் அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப் பெற்ற காயத்தகவலின் பேரில் மேற்படி மருத்துவமனைக்கு தலைமை காவலர் சேகர் என்பவரை அனுப்பி அவர் அங்கு சென்று அங்கு உள்நோயாளியாக இருந்த மயில்சாமி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் பரமசிவம் வசம் ஒப்படைத்து அதனை பெற்ற பின்னர் புகார் வாக்குமூலத்தின் தன்மைக்கேற்ப **நி.கு.எண்.15/2024 u/Sec. 279, 337 IPC** ஆக வழக்கு பதிவு செய்தார். பின்னர் சம்பவயிடம் சென்று வரைபடம் தயார் செய்து பின்னர் மேல் விசாரணைக்காக இதன் அசல் புகார் வாக்குமூலம் மற்றும் முதல் தகவல் அறிக்கையை இதர நகல்களை புலனாய்வு அதிகாரி ஆகிய என் வசம் ஒப்படைத்தார்.

2. பிறகு நான் புலன் விசாரணை நகலை எடுத்துக்கொண்டு சாட்சிகள் மீனாகுமாரி, தலைமை காவலர் சேகர், மருத்துவர் சசிகுமார், காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் பரமசிவம் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கில் காயமடைந்த மயில்சாமி என்பவருக்கு சிகிச்சை அளித்த

மருத்துவர் சசிகுமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, விபத்து பதிவேடு பெற்றேன். இவ்வழக்கின் எதிரி கடந்த 19.01.2024 ம் தேதி கைது செய்யப்பட்டு நிலைய பிணையில் விடுவிக்கப்பட்டார். இவ்வழக்கின் விபத்தில் ஈடுபட்ட TN–77 E 6080 Alto இளகு ரக வாகனத்தை கைபற்றி மோட்டார் வாகன ஆய்வாளர் வசம் இயந்திரகோளாறு உள்ளதா என ஆய்வு செய்ய ஆய்வாளர் திருமதி.மீனாகுமாரி வசம் அனுப்பப்பட்டது. இதன் **இயந்திரகோளறு அறிக்கை அ.சா.ஆ.6 ஆகும்.** விபத்தில் ஈடுபட்ட TN–52–S–3052 Yamaha இருசக்கர வாகனத்தை கைபற்றி மோட்டார் வாகன ஆய்வாளர் வசம் இயந்திரகோளாறு உள்ளதா என ஆய்வு செய்ய ஆய்வாளர் திருமதி.மீனாகுமாரி வசம் அனுப்பப்பட்டது. இதன் **இயந்திரகோளறு அறிக்கை அ.சா.ஆ.7 ஆகும்.**

3. இவ்வழக்கின் புலன் விசாரணையில் எதிரி மீதான குற்றம் உண்மை எனத் தெரிய வந்ததால் எதிரி மீது கடந்த 08.02.2024 ம் தேதி **நி.கு.எண்.15/2024 u/Sec. 279, 337 IPC லிருந்து u/Sec. 279, 338 IPC** ஆகிய பிரிவுகளின் கீழ் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தேன். பிரிவு மாறுதல் அறிக்கை **அசா.ஆ. 8** ஆகும்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

4) எப்போது மருத்துவமனையிலிருந்து தகவல் கிடைக்கப்பெற்றது என்றால் 15.01.2024 ம் தேதி மதியம் 2.00 மணிக்கு தகவல் கிடைத்தது. புகார் வாக்குமூலம் எப்போது வாங்கி பரமசிவம் காவல்உதவி ஆய்வாளரிடம் கொடுக்கப்பட்டது என்றால் 16.01.2024 ம் தேதி 21.00 மணிக்கு கொடுத்தார். சம்பவம் 15.01.2024 ம் தேதி காலை 9 மணிக்கு நடந்தது என்றால் மதியம் 12 மணிக்கு நடந்தது. முதல் தகவல் அறிக்கை இரவு 9 மணிக்கு பதியப்பட்டது என்றால் ஆமாம். என்ன காரணத்திற்காக கால தாமதம் ஏற்பட்டது என்றால் காவலர் பற்றாக்குறை காரணமாக காலதாமதம் ஏற்பட்டது.

5) மாதிரி வரைப்படத்தில் உள்ள வீடுகளில் வசிக்கும் நபர்களை இந்த வழக்கில் சாட்சிகளாக விசாரிக்கவில்லை என்றால் ஆமாம். என்ன காரணம் என்றால்

விசாரணையின் போது யாரும் சம்பவ சமயத்தில் இல்லை என்பதாலும், அங்கிருந்த ஒரு சில நபர்களில் சாட்சியம் அளிக்க முன்வராத காரணத்தால் சாட்சியமாக நீதிமன்றத்தில் காட்டவில்லை. வாதி தனக்கு முன்னால் சென்ற காரின் மீது தான் சென்று மோதியதாக புகாரில்சொல்லியுள்ளார் என்றால் அவ்வாறு இல்லை. பொதுவாக 10 மீட்டர் இடைவெளியுடன் தான் வாகனங்கள் பயணிக்க வேண்டுமென்றால் ஆமாம்.

6) இரு சக்கர வாகனம் ஓட்டி சென்ற நபர் தலைகவசம் அணிந்திருந்தாரா என்றால் அது சம்மந்தமாக நான் விசாரிக்கவில்லை. விபத்து நடந்த இடம் தொட்டில்பட்டி டூ சேலம் செல்லும் வழி என்றால் ஆமாம். நெருக்கமான பகுதி என்றால் ஆமாம். 100 மீட்டர் இடைவெளியில் அந்த பகுதியில் வேகத்தடை அமைந்துள்ள நிலையில் எதிரி வேகமாக செல்ல வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. வாதி தான் தலைகவசம் அணியாமலும் எந்தவித பாதுகாப்பு இல்லாமல் கார் மீது மோதாமல் தானாக விழுந்து விபத்தை ஏற்படுத்திக் கொண்டார் என்றால் சரியல்ல. எதிரி சாலை விதிகளை மதித்து மெதுவாக சென்றார் என்றால் இல்லை. எதிரிக்கும் விபத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றும் வாதி தானாக விழுந்து விபத்தை தேடிக் கொண்டு காப்பீடு பெறுவதற்காக பொய்யாக இந்த வழக்கு போடப்பட்டது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Myilswamy Digitally signed by Myilswamy Date: 2026.03.24 12:33:52 +0530

Judicial Magistrate No.II,
Mettur.